www.Padasalai.Net www.Trbtnpsc.Com

B

# முதல் திருப்புதல் தேர்வு - 2024

## பதினொன்றாம் வகுப்பு

நேரம் : 3.00 மணி | வரலாறு | மதிப்பெண்கள் : 90

பகுதி - I

I. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.
சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 20×1=20

1) மெஹர்கார் ________ பண்பாட்டுடன் தொடர்புடையது.
அ) பழைய கற்காலம் ஆ) புதிய கற்காலம்
இ) இடைக் கற்காலம் ஈ) செம்புக்காலம்

2) கூற்று: முற்கால வேத காலத்தில் குழந்தைத் திருமணம் இருந்ததற்கான சான்றுகள் இல்லை
காரணம்: பின் வேதகாலத்தில் பெண்கள் சடங்குகளிலிருந்து விலக்கி வைக்கப்பட்டனர்
அ) கூற்றும், காரணமும் சரியானவை. காரணம் கூற்றை விளக்குகிறது.
ஆ) கூற்றும், காரணமும் சரியானவை. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை
இ) கூற்று சரியானது, காரணம் தவறானது
ஈ) கூற்று, காரணம் இரண்டும் சரியானவை.

3) ________ வேளாண்மை முறையே மேம்படுத்தியதில் முக்கியப் பங்காற்றியது
அ) இரும்பு ஆ) வெண்கலம் இ) செம்பு ஈ) பித்தளை

4) அசோகரது தூண்களில் உள்ள பிராமி எழுத்துகளுக்கு பொருள் கண்டுபிடித்தவர் ________
அ) தாமஸ் சாண்டர்ஸ் ஆ) ஜேம்ஸ் பிரின்செப்
இ) சர் ஜான் மார்ஷல் ஈ) வில்லியம் ஜோன்ஸ்

5) இக்சவாகுகள் பகுதியில் வலிமை பெற்றிருந்தனர்
அ) ஆந்திரா - கர்நாடகா ஆ) ஒடிசா இ) தக்காணப் பகுதி ஈ) பனவாசி

6) கீழ்க்கண்டவற்றில் பொருத்தமற்றது எது?
அ) புத்தசரிதம் - அஸ்வகோஷர் ஆ) எரித்ரியக் கடலின் பெரிப்ளஸ் - மெகஸ்தனிஸ்
இ) அர்த்தசாஸ்திரம் - கௌடில்யர் ஈ) காமசூத்திரம் - வாத்சாயனர்

7) பொருத்துக.
i) தன்வந்திரி - 1. சூரிய சித்தாந்தா
ii) வராஹமிகிரா - 2. அமரகோஷா
iii) ஆர்யபட்டர் - 3. பிருஹத் சம்ஹிதா
iv) அமரசிம்மா - 4. ஆயுர்வேதா
அ) 4, 3, 1, 2 ஆ) 4, 1, 2, 3 இ) 4, 2, 1, 3 ஈ) 4, 3, 2, 1

8) கீழ்க்கண்டவற்றுள் தவறானது எது?
அ) தர்மபாலர் சோமபுரியில் பெரியதொரு பௌத்த விகாரையைக் கட்டினார்.
ஆ) இராமபாலர் இராமசரிதத்தை எழுதினார்.
இ) மகிபாலர் கீதங்கள் வங்காளத்தின் கிராமப்பகுதிகளில் இப்போதும் பாடப்படுகின்றன
ஈ) கௌடபாடர் ஆகம சாத்திரத்தை இயற்றினார்.

Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trbtnpsc.Com



9) காம்போஜம் என்பது நவீன ________
அ) அஸ்லாம் ஆ) சுமத்ரா இ) ஆனம் ஈ) கம்போடியா

10) உலகப் புகழ்பெற்ற கஜூராஹோ கோவிலைக் கட்டியவர்கள் ________
அ) ராஷ்டிரகூடர் ஆ) டோமர் இ) சண்டேளர் ஈ) பரமர்

11) ________ ஒரு கலத்துக்குச் சமம் ஆகும்
அ) 28 கி.கி. ஆ) 27 கி.கி இ) 32 கி.கி ஈ) 72 கி.கி

12) கீழ்க்கண்டவற்றை காலவரிசைப்படுத்துக
அ) சங்கம வம்சம், ஆரவீடு வம்சம், சாளுவ வம்சம், துளுவ வம்சம்,
ஆ) சங்கம வம்சம், சாளுவ வம்சம், துளுவ வம்சம், ஆரவீடு வம்சம்,
இ) சாளுவ வம்சம், சங்கம வம்சம், துளுவ வம்சம், ஆரவீடு வம்சம்,
ஈ) சங்கம வம்சம், துளுவ வம்சம், சாளுவ வம்சம், ஆரவீடு வம்சம்,

13) கூன்பாண்டியன் என்று அழைக்கப்பட்டவர்
அ) முதலாம் மகேந்திரவர்மன் ஆ) மாறவர்மன் அரிகேசரி
இ) நரசிம்மவர்மன் ஈ) சுந்தரபாண்டியன்

14) பின்வருவனவற்றில் சரியான கூற்றினைக் கண்டுபிடி
i) ராணா சங்காவின் மூர்க்கமான வலிமை வாய்ந்த படைகள் பாபரின் சக்தி வாய்ந்த படையை எதிர்கொண்டது
ii) கன்னோசிப் போருக்குப் பின் அக்பர் நாடு இல்லாத ஒரு இளவரசர் ஆனார்.
அ) (i) சரி ஆ) (ii) சரி
இ) (i) மற்றும் (ii) தவறு ஈ) (i) மற்றும் (ii) சரியானவை

15) கூற்று: மூன்றாம் பானிப்பட் போர் ஆங்கிலேயரின் அதிகார எழுச்சிக்கு வழிவகுத்தது
காரணம்: இத்தோல்வி மராத்தியருக்கும் முகலாயருக்கும் ஒரு பெரிய அதிர்ச்சியைக் கொடுத்தது.
அ) கூற்று சரி, காரணம் கூற்றின் சரியான விளக்கம் ஆகும்
ஆ) கூற்று சரி, காரணம் தவறு
இ) கூற்று மற்றும் காரணம் தவறானவை
ஈ) கூற்று சரி, காரணம் கூற்றின் சரியான விளக்கம் அல்ல

16) இந்தியாவில் போர்த்துகீசியரின் அரசியல் தலைமையிடம் ________ ஆகும்
அ) கோவா ஆ) டையூ இ) டாமன் ஈ) சூரத்

17) பொருத்துக
i) ஆர்தர் காட்டன் - 1. ஸ்கிருத கல்லூரி
ii) வில்லியம் ஸ்லீமேன் - 2. கொள்ளிடம்
iii) வில்லியம் பெண்டிங் - 3. தக்கர்களை அடக்குதல்
iv) காரன்வாலிஸ் - 4. சதி ஒழிப்புச் சட்டம்
அ) 4, 1, 2, 3 ஆ) 2, 3, 4, 1 இ) 3, 2, 1, 4 ஈ) 2, 1, 4, 3

Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trbtnpsc.Com



18) வீரபாண்டிய கட்டபொம்மன் தொடர்பான பிரச்சனைகளை தவறாகக் கையாண்டதால் பணிநீக்கம் செய்யப்பட்ட ஆங்கிலேய ஆட்சியர் ஆவார்.
அ) W.C.ஜாக்சன் ஆ) A. பானர்மேன்
இ) S.R.லூஷிங்டன் ஈ) P.A.ஆக்னியூ

19) "இந்திய மறுமலர்ச்சியின் தந்தை" _______ ஆவார்.
அ) சுவாமி விவேகானந்தர் ஆ) தயானந்த சரஸ்வதி
இ) இராஜாராம்மோகன்ராய் ஈ) ஆத்மராம் பாண்டுரங்

20) மூத்த மகன் _______ அரசனாவதை ஷாஜகான் விரும்பினார்
அ) ஔரங்கசீப் ஆ) தாராஷூகோ இ) ஷூஜா ஈ) முராத்

## பகுதி - II

II. ஏதேனும் ஏழு வினாக்களுக்கு சுருக்கமாக விடையளிக்கவும்:-
அவற்றில் வினா எண்.30க்கு கண்டிப்பாக விடையளிக்கவும்:- 7×2=14

21) பெருங்குளம் - சிறுகுறிப்பு வரைக.
22) மகாவீரருடைய போதனைகளின் மையக்கருத்து என்ன?
23) எதன் காரணமாக மகா அலெக்சாண்டர் போராஸின் அரியணையைத் திருப்பித் தந்தார்?
24) அலகாபாத் தூண் கல்வெட்டுக் குறித்துக் கூறுக
25) தக்கோலப் போரின் முக்கியத்துவம் குறித்துக் கூறுக
26) நாற்பதின்மர் அமைப்பு குறித்துக் கூறு
27) இராமானந்தரின் போதனைகள் யாவை?
28) முகலாயக் கட்டடக் கலையின் மறுவடிவமாகக் கருதப்படுவது எது? அதன் வடிவமைப்பை விவரி?
29) நாயக்க அரசுகள் யாவை? அவை நிறுவப்பட காரணம் என்ன?
30) இராமலிங்க அடிகளார் பற்றி நீவிர் அறிவன யாவை?

## பகுதி - III

III. ஏதேனும் ஏழு வினாக்களுக்கு குறுகிய விடையளிக்கவும்:-
அவற்றில் வினா எண்.40க்கு கண்டிப்பாக விடையளிக்கவும்:- 7×3=21

31) இடைக் கற்காலப் பண்பாடுகளின் குறிப்பிடத்தக்க பண்புகள் யாவை?
32) மேய்ச்சல் சமூகத்தின் இயல்புகளை ஆய்க
33) சோழ அரசர்களில் தலைசிறந்தவன் கரிகாலன்
34) "இரண்டு வணிகச் சுற்றுகளின் மையமாக முசிறி இருந்தது" எவ்வாறு?
35) புகழ்பெற்ற சைவ மூவர்கள்.
36) சோழர் காலத்தைச் சேர்ந்த கல்வி நிறுவனங்களைக் குறிப்பிடுக
37) இரண்டாம் அலெக்சாண்டர் என்று அழைக்கப்பட்டவர் யார்? ஏன்?
38) ராஜா தேசிங்கின் வீரதீரச் செயல்கள்
39) வாரிசு உரிமை இழப்புக் கொள்கை
40) 1857 ஆண்டு புரட்சியின் விளைவுகள் யாவை?

Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trbtnpsc.Com



பகுதி - IV

IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்:- 7×5=35

41) அ) தமிழ்நாட்டின் பெருங்கற்கால அகழ்வாய்விடங்களைப் பற்றி விவாதிக்க

(அல்லது)

ஆ) புத்தரின் எண்வழிப் பாதையை விவரி?

42) அ) அசோகரின் கல்வெட்டுக் கட்டளைகள் பற்றிக் கூறுக.

(அல்லது)

ஆ) கலைக்கும், இலக்கியத்துக்குமான கனிஷ்கரின் பங்களிப்பு குறித்து விவாதிக்கவும்.

43) அ) "குப்தர் காலம் பண்டைய இந்தியாவின் பொற்காலம்" - விவாதிக்கவும்.

(அல்லது)

ஆ) அலா-உத்-தின் கில்ஜியின் பொருளாதாரச் சீர்திருத்தங்களை விவாதிக்கவும்.

44) அ) சோழர் காலக் கட்டுமானக் கலையின் சிறப்புகளை எழுதுக.

(அல்லது)

ஆ) பக்தி இயக்கத்தின் சிறப்பியல்புகளை வரிசைப்படுத்துக.

45) அ) "வருவாய் நிர்வாகத்தில் ஷெர்ஷா அக்பரது முன்னோடி" - விளக்குக.

(அல்லது)

ஆ) நவீனக் கல்விமுறைக்கு இரண்டாம் சரபோஜியின் பங்கினை விளக்குக.

46) அ) வெல்லெஸ்லி அறிமுகப்படுத்திய துணைப்படைத் திட்டத்தினைப் பற்றி விவரி?

(அல்லது)

ஆ) இந்திய வரைபடத்தில் கீழ்க்காணும் ஐந்து இடங்களைக் குறிக்கவும்.

1. தட்சசீலம் 2. மதுரா 3. உஜ்ஜையினி 4. கவர்ணகிரி 5. பாடலிபுத்திரம்

47) அ) 1806 ஆண்டின் வேலூர் புரட்சிக்கான காரணங்களையும் போக்கினையும் விவரிக்கவும்.

(அல்லது)

ஆ) டெல்லி சுல்தானியத்தில் ஏதேனும் ஐந்து நிகழ்வுகளைக் குறிக்கும் காலக்கோடு வரைக.

*****/*****

Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com